

தேவர் ஜெயந்தியை முன்னிட்டு, திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள "பசும்பொன் முத்துராமலிங்க தேவர்" அவர்களின் திருவுருவச் சிலைக்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும் – திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.என். சேகரன், சபியுல்லா, லீலாவேலு, பகுதிச் செயலாளர் இ.எம். தர்மராஜ், மணிவேல், சிவகுமார், ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.எம். கருணாநிதி, கங்காதரன், ராஜேந்திரன், நகரச் செயலாளர் காயாம்பு, பேரூர் செயலாளர் தங்கவேல், மாநில – மாவட்ட – மாநகர நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், மாவட்ட – மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ரயில்களில் முன்பதிவுக்கான

## கால அவகாசம் 60 நாட்களாக குறைப்பு!

### புதிய விதிமுறை அமலுக்கு வந்ததாக ரயில்வே நிர்வாகம் அறிவிப்பு!

சென்னை,நவ.3-

ரயில்களில் முன்பதிவுக்கான கால அவகாசம் 60 நாட்களாக குறைக்கும் நடைமுறை அமலுக்கு வந்துள்ளது.

ரயில்களில் பண்டிகை காலம் தொடங்கி சாதாரண ரிசர்வேஷன் வரை அனைத்திற்கும் 120 நாட்கள் முன்னரே பதிவு செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டு வந்தன. இனி, 60 நாட்கள் முன்கூட்டி மட்டுமே ரயில் டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ள முடியும். இந்த புதிய விதிமுறை இன்று முதல் வந்துள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னதாக 120 நாள் முன்கூட்டியே ரயில் டிக்கெட் புக் செய்திருப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. நேற்று வரை முன்பதிவு செய்யப்பட்ட, 60 நாட்களுக்கு மேலான ரயில் டிக்கெட்டுகளை ரத்து செய்ய அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

ரயில் டிக்கெட் முன்பதிவு அவகாசம் 60 நாட்களாக குறைப்பு

ரயில்களில் பண்டிகை காலம் தொடங்கி சாதாரண ரிசர்வேஷன் வரை

அனைத்திற்கும் 120 நாட்கள் முன்னரே பதிவு செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டு வந்தன

இனி, 60 நாட்கள் முன்கூட்டி மட்டுமே ரயில் டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ள முடியும் இந்த புதிய விதிமுறை இன்று முதல் வந்துள்ளது இதற்கு முன்னதாக 120 நாள் முன்கூட்டிய ரயில் டிக்கெட் புக் செய்திருப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது நேற்று முன்தினம் வரை முன்பதிவு செய்யப்பட்ட, 60 நாட்களுக்கு மேலான ரயில் டிக்கெட்டுகளை ரத்து செய்ய அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

### வணிகப் பயன்பாட்டிற்கான

## சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு!

சென்னை,நவ.3-

வணிகப் பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 61 ரூபாய் 50 காசுகள் உயர்ந்துள்ளது.

சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலைக்கு ஏற்ப, சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயித்து வருகின்றன. அந்த வகையில் ஒவ்வொரு மாதமும் 1ம் தேதி எண்ணெய் நிறுவனங்கள் புதிய விலையை நிர்ணயித்து அறிவிக்கின்றன. அதன்படி, இந்த மாதத்திற்கான விலை மாற்றம் குறித்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி

சென்னையில் வர்த்தக பயன்பாட்டுக்கான 19 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 61 ரூபாய் 50 காசுகள் அதிரடியாக உயர்ந்து ஆயிரத்து 964 ரூபாய் 50 காசுகளாக விற்பனை செய்யப்படுகிறது. 14 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு எந்த மாற்றமும் இல்லாமல் 818 ரூபாய் 50 காசுகளுக்கு விற்பனை யாகிறது.

### தருமபுரி கிழக்கு மாவட்டம் – நல்லம்பள்ளி மத்திய ஒன்றிய

## பி.எல்.ஏ.-2 - பி.எல்.சி. - கிளைக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்பிரமணி அறிவிப்பு!



தருமபுரி, நவ. 3-

தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைபடி தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி மத்திய ஒன்றியம் ஊராட்சி வாரியாக பி.எல்.ஏ.-2 மற்றும் கிளை கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி அறிவிப்பு இன்று (03.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) தருமபுரி கிழக்கு மாவட்டம் தருமபுரி சட்டமன்றத் தொகுதி நல்லம்பள்ளி மத்திய ஒன்றிய பி.எல்.ஏ.-2 - பி.எல்.சி. மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம். பெ.சுப்பிரமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் தருமபுரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மருத்துவர் ஆ.கா.தருண் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

அது சமயம் நல்லம்பள்ளி மத்திய ஒன்றியம் ஒன்றியக் கழகச் செயலாளர் கே.பி. மல்லமுத்து ஏற்பாட்டில் 1. கம்மம்பட்டி 9.00 மணி, சோழியனூர் 2. தொப்பூர் 10.00 மணி ஞான வடிவேல் தோட்டம் 3. மானியதள்ளி 11.00 மணி கீழ்ஈசல்பட்டி 4. சாமிசெட்டிப்பட்டி 12.00 மணி சாமிசெட்டிப்பட்டி 5. ஏலகிரி 1.30 ஏலகிரி 6. டொக்குபோதனஹள்ளி மற்றும் பாளையம்புதூர் 11.00 ஒன்றிய கழக அலுவலகம் 7. பாகலஹள்ளி 12.00 மணி, சென்றாயசாமி கோயில் 8. சிவாடி 1.00 மணி, சிவாடி 9. பூதனஅள்ளி 2.00 மணி, பூதனஅள்ளி உள்ளிட்ட இடங்களில் நடைபெற உள்ள ஆலோசனைக் கூட்டத்தில் கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன். பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து. கிளை , பி.எல்.ஏ.-2 - பி.எல்.சி. நிர்வாகிகளுடன் ஆலோசனை. வாக்காளர் சேர்த்தல் நீக்கல் குறித்து. இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல் குறித்து கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவாரூர் நகரக் கழகத்தில் தலைமைக்கழகத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் சார்பு அணிகளில் இடம் பெற்றிருக்கும் மகளிர், மாவட்டக் கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ.வை மரியாதை நிமித்தம் சந்தித்து கழக தலைவர் முதல்வர் தளபதி, இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தனர். உடன் நகரச் செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ் மற்றும் ரங்கநாயகி இருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் நகர துணைச் செயலாளர் சிவக்குமார் கடந்த 31.10.2024 அன்று உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார். இந்த தகவல் அறிந்ததும் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் 1.11.2024 அன்று அவரது இல்லத்திற்கு நேரில் சென்று குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். அப்போது மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், மணிகண்டன், பர்கத்அலி, பாஸ்கரன், விஜய் ஈஸ்வரன், ராமச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# களமும் காலமும்

## 'கணையாழி' தலையங்கம்!

காலத்தையே மாற்றியவர்கள்
களத்தில் நிற்கிறார்கள்
என்பது அறியாமல்
காலம் மாறியிருப்பதாகக்
களத்தில் குதிக்கிறார்கள்!

ஆட்சிக்கு வந்து விடுவதாக
வலை வீசுகிறார்கள்!
நம்பிக்கை தூண்டிலைப்
போட்டுப் பார்க்கிறார்கள்!

நம்பிக்கை
வாழ்க்கையின் அர்த்தத்திற்குத்
திசை காட்ட வேண்டும்!
பயணிக்க வழி காட்ட வேண்டும்!
தடைகளை உடைக்க
திறன் சேர்க்க வேண்டும்!
கனவு இலக்கைக் கண்டடையக்
கலங்கரை விளக்காக வேண்டும்!
அதனால்
நம்பிக்கைகள் எல்லாம்
மக்கள் சார்ந்து இருக்க வேண்டும்!
இருக்கிற
சாதி நம்பிக்கையில்
வேற்றுமை குறைய வேண்டும்!
மத நம்பிக்கையில்
பகைமை அழிய வேண்டும்!

பொதுமக்கள் வந்து பார்க்கும்
அதிகாரிகளே
சாதி அடையாளங்களை
அலுவலகப் பெயர்ப் பலகையில்
போட்டுக் கொள்வதும்
அலுவலக மேசையிலேயே
சாதி மதப் படங்களை வைத்து
வழிபாடு செய்வதும்
சாதி அடையாளக் கயிறுகளில்
கைகளைக் கட்டிக் கொள்வதும்
நெற்றிகளைத்
தனிப்பட்ட நம்பிக்கையின்
விளம்பரத் தட்டிகள் ஆக்குவதும்
நல்லிணக்க வாழ்வுக்கு
வழிகாட்டக் கூடுமோ?

தனி மனித நம்பிக்கை
மனம் சார்ந்தது: ஆதாரம் தேடாதது!
ஆனால்
மக்களை ஒன்றிணைக்கும்
பொது நம்பிக்கைக்குக்
கொள்கையே அடித்தளமாகும்!

கொள்கைதான்
நம்மைச் சுற்றியுள்ள
களச் சூழலைப் புரிய வைக்கும்!
காலப் புரிதலை மாற்றி அமைக்கும்!
காலப் புரிதல் இல்லாமல்
வரும் காலக்
களத்தை மாற்ற இயலாது!

களத்தை மாற்றிக்
காலத்தையும் மாற்றியவர்கள்
வரலாற்றுக் காலத்தில் மட்டுமில்லாமல்
வரும் காலத்திலும்
கொள்கையில்

வாழ்ந்து கொண்டே இருப்பார்கள்!
கொள்கை இல்லையேல்
கூட்டத்தில் பயனில்லை!
கொள்கைதான் அடையாளம்!

கடந்தகால அடையாள வேடங்களில்
நிகழ்காலத்தை
ஏமாற்றும் முயற்சிகள்
குடுகுடுப்பையின் நம்பிக்கை!

"நல்ல காலம் பொறக்குது" எனும்
குடுகுடுப்பை நம்பிக்கையில்
சொல்பவர் பைதான்
உடனே நிறைகிறது!
கேட்பவருக்கு நல்ல காலம்
என்பதைவிட
சொல்பவரின் நல்ல காலம்தான்
குடுகுடுப்பையின்
நோக்கமாக இருக்கிறது!

வரும் பொதுத் தேர்தலில்
ஆளும் தி.மு.க.
ஆட்சிக்கு வர முடியாது என்று
ஆரூடம் சொல்கிறவர்களை
அரசியல் சோதிடர்கள் என்று
தமிழ்நாடு முதலமைச்சர்
சொன்னார் என்றதும்
எதிர்க் கட்சித் தலைவர்
ஆமாம்!
சோதிடம்தான் சொல்கிறேன்
ஆட்சிக்கு வரமுடியாது என்று
அறைகூவல் விடுகிறார்.

இப்படித்தான்
ஸ்டாலின் இனி முதல்வராகவே முடியாது என்று
ஏப்ரல் 2018 இல்
விஜயகாந்த் பேசினார்!

இப்படித்தான்
ஓட்டப்பிடாரத்தில்
ஓ.பி.எஸ். மே, 2019 இல் பேசினார்!
தி.மு.க., தலைவர் ஸ்டாலின்,
கனவில் கூட
எக்காலத்திலும் முதல்வராக முடியாது என
பிப்ரவரி 2021 இல் மதுரையில்
அப்போதைய தமிழக பா.ஜ., தலைவர்
முருகன் பேசினார்.

சேலம் மாவட்டம்
ஓமலூர் சட்டமன்றத் தொகுதிப்
பிரச்சாரக் கூட்டத்தில்
ஏப்ரல் 2021 இல்
எந்த காலத்திலும் ஸ்டாலின்
முதல்வராக முடியாது
என்று பேசினார்
எடப்பாடி பழனிசாமி.
அரசியல் சோதிடர்களை முறியடித்து
ஆட்சியில் இருக்கிறார்
தமிழ்நாடு முதலமைச்சர்!

சாதி அடையாளம் காட்டும்
கயிறுகளை அவிழ்க்க
நீதிநாயகம் சந்துரு அறிக்கை,
பள்ளி மாணவர் பசி போக்கக்
காலைச் சிற்றுண்டி
ஆண் பெண் வேறுபாடின்றிக்
கல்லூரி மாணவர் உதவித் தொகை என்று
காலத்தை மாற்றக்
களத்தை
மாற்றிக் கொண்டிருக்கிறார்
தமிழ்நாடு முதலமைச்சர்!



-நன்றி
'கணையாழி'
நவம்பர் - 2024

ம.ரா.